24th July 1962]

### அறுவைக் கருவித் தொழிற்சாலே

* 564 கேள்வி.—**திரு. அ. பெ. தர்மலிங்கம், திரு. வை. சங்கரன், திரு. முனு ஆதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அறுவைக் கருவித் தொழிற்சாலே ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

(இ) எப்போது ஏற்படுத்தப்படும் ?

(உ) அதற்காகும் உத்தேசச் செலவென்ன ?

**THE HON. SRI. R. VENKATARAMAN :** (அ) to (உ) A note[a] on the subject is placed on the table of the House.

**திரு. வை. சங்கரன் :** என்னென்ன விதமான அறுவைக் கருவிகள் எல்லாம் அங்கே உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ? அதற்கு வேண்டிய இரும்பு போன்றவைகள் எல்லாம் எங்கிருந்து வரவழைக்கப் படுகின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மொத்தம் 25 லட்சம் யூனிட்டில் பலவிதமான கருவிகள் செய்யப்படும். அதற்கு வேண்டிய மூலப் பொருள் கள், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளேயெல்லாம் மத்திய சர்க்கார் செய்து கொண்டிருக்கிருர்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலே வாய்ப்புகள் ஏற்படும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நேரடியாக, சற்றேறக்குறைய 2,000 பேருக்கு வேலே வாய்ப்புக் கிடைக்கும்.

### வெடி மருந்து லேசென்ஸ் (கிணறு வெட்டுதல்)

* 565 கேள்வி.—**திரு. சா. கணேசன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பாறை நிலப் பிரதேசங்களில் கிணறுகள் வெட்டவும் ஆழப்படுத்தவும் வெடிமருந்து லேசென்ஸ், ஜில்லா கலெக்டருக்குப் பதிலாக தாலூகா அதிகாரிகள் கொடுக்க அரசாங்கம் உத்திரவிட உத்தேசம் உண்டா ?

**THE HON. SRI. M. BHAKTAVATSALAM :** Yes, Sir.

**திரு. சா. கணேசன் :** இப்போது ஒரு கேணியைத் தோண்டுவதற்கோ, ஆழப்படுத்துவதற்கோ 10 அல்லது 15 ரூபாய்க்கு வெடி மருந்து வாங்க வேண்டும் என்ருல், விவசாயி ஒருவர் ஜில்லா கலெக்டர் இருக்கும் இடத் திற்குப் போய்வர 30 ரூபாய் 40 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இதற்கான லேசெனஸ் கொடுக்கும் பொறுப்பைத் தாசில்தாருக்கே கொடுக்க சீக்கிரமாக ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுதான் அரசாங்கத்தின் உத் தேசம். தாசில்தாரிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டால் சீக்கிரத் தில் நடக்கும். இந்த வெடி மருந்துக்கான லேசென்ஸ் கொடுப்பதை " இந்தியன் எக்ஸ்ப்ளோஸிவ் " சட்டத்தின்படி கொடுக்கவேண்டியிருப்ப தால் மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறேம். அங்கிருந்து பதில் வந்ததும் இது நிறைவேற்றப்படும்.

---

[a] Printed as appendix II on page 227.